DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil
O.S. No. 119/2021

| | |
|---|---|
| Deposition of Witness for | : Pw 2 |
| Name | : வேலுச்சாமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.01.2023 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03rd January 2023.

முதல் விசாரணை

நான் வழக்கின் 3ம் நபர். நான் இருமன்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதிகளை எனக்கு நன்கு தெரியும். நான் இன்று இவ்வழக்கில் எனது சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. வழக்கின் 1ம் வாதிதான் என்னை அழைத்து வந்தார். வாதிகளின் சித்தப்பா இறந்துபோன வெள்ளத்துரை என்கிற வீரபுத்திரத்தேவருக்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இறந்துபோன வெள்ளத்துரை என்கிற வீரபுத்திரத்தேவருக்கு திருமணம் ஆகவில்லை. இறந்துபோன வெள்ளத்துரை என்கிற வீரபுத்திரத்தேவரின் அப்பா மருதையாத்தேவர், அம்மா பெயர் சுந்தரம்மாள், அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. நான் பிறக்கும்முன்பே இறந்து விட்டார்கள்.

இறந்துபோன வெள்ளத்துரை என்கிற வீரபுத்திரத்தேவருக்கு உடன்பிறந்தவர்கள் சங்கரமழவரயான் மட்டும்தான். சங்கரமழவரயான் இறந்துவிட்டார். அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள், ஒரு ஆண் மகன். அவர்கள் பெயர்கள் முருகலட்சுமி மற்றும் தாய் என்கிற முத்துலட்சுமி. ஆண் பிள்ளை பெயர் முருகேசன் அவர் வழக்கின் 1ம் வாதி. வழக்கின் 1ம் வாதி எனக்கு அண்ணாச்சி மகன் ஆவார். நான் இருமன்குளத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன வெள்ளத்துரை என்கிற வீரபுத்திரத்தேவருக்கு வாதிகள் நேரடி வாரிசுகள் இல்லாத காரணத்தினால் பிரதிவாதிகள் வாரிசுசான்று வழங்கமுடியாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு நான் உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**